திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நாட்டறம்பள்ளியிலும் கந்திலியிலும் அரிசன மாணவர் விடுதிகள் திறப்பதற்கு செயற்குறிப்பு இல்லை, அதுகுறித்துப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டு பகுதிகளும் வடார்க்காடு மாவட்டத்திலேயே பிற்படுத்தப்பட்ட பகுதிகளாகும். ஆகவே, அந்த இரு பகுதிகளைக் குறித்து அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தனி அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டிலேயே அங்கு விடுதிகள் திறக்கப்பட முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விடுதிகள் தேவை என்றால், அதுகுறித்து மாவட்ட நல அதிகாரிதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இயக்குநருக்குத் தெரிவிக்கிறார். எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள், எத்தனை மைல் சுற்றுவட்டாரத்திலிருந்து மாணவர்கள் வருகிறார்கள், அவர்களுக்கு ஒரு விடுதி தேவையா என்பதைக் குறித்து மாவட்ட நல அதிகாரி செயற்குறிப்பு அனுப்பவேண்டும். அப்படி செயற்குறிப்பு அவர்கள் அனுப்பவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கருதுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட நல அதிகாரியை அணுகி, இந்தச் செயற்குறிப்பை விரைவில் அனுப்ப ஏற்பாடு செய்வார்களானால், அதை அரசு விரைவிலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

* 598 வினா.—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளை அரசு மேற்கொள்ளும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அரிசன நலத்துறை உதவி பெற்று தனியார்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளைப் படிப்படியாக அரசு மேற்கொள்வதெனவும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஒழுங்கீனமாக நடத்தப்படுபவைகளை முதலில் மேற்கொள்வதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி ஒவ்வொராண்டும் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, ஒரு சில தனியார் நடத்தும் விடுதிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் அரிசன நல விடுதிகள் நம்முடைய மாநிலத்தில் தற்போது மொத்தம் எத்தனை உள்ளன ? இதுவரை அரசால் எத்தனை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா ?

1974 மார்ச் 25]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திட்டவட்டமாகச் சொல்வதற் கில்லை. நூற்றுக்கும் மேலாகத்தான் இருந்தன. ஆனுல், படிப்படியாக ஆண்டுக் காண்டு குறைந்தது. 20–25 விடுதிகளைக் கையகப்படுத்திஞேம். பிறகு படிப்படியாகக் குறைந்தது. இந்த ஆண்டு எடுக்க முடியும் என்ற நிலை கூட இல்லை. மொத்தமாக இதுவரை முப்பது, முப்பத்தைந்து தனியார் விடுதி களுக்கு மேல் நாம் கையகப்படுத்தியிருப்போம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு இந்த ஹாஸ்டல் வசதி செய்துகொடுப்பதைப் பொறுத்தவரையில் அது ஒரு நல்ல காரியம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். அரிசனங்களுக்காக நடத்தக்கூடிய ஹாஸ்டல் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அதிலே ஒரு விசேஷக் கவனம் செலுத்தி, இதுவரை தனியார் நடத்திக்கொண்டி ருப்பதை சர்க்கார் எடுப்பதற்கு—இந்த ஆண்டு முடிவு செய்யாமற்போனுலுங் கூட—விசேஷ முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இது நீண்ட காலத்திற்கு முன்னுல் எடுத்த ஒரு முடிவாக இருந்தாலும், தனியார் நடத்துகிற விடுதிகளை அரசு எடுக்கும்போது, அவைகளையெல்லாம் எடுக்கக் கூடாது, அவர்களே நடத்தட்டும் என்று பல பேர் சிபார்சுக்கு வந்தார்கள். அதற்காகவே சிலவற்றை விட்டுவிட்டோம்.

வேறு சில விடுதிகளை எடுக்கும்போது, அவர்கள் ‘நாங்கள் கடன் வாங்கி இருக்கிறோம்; அந்தக் கடனை நாங்கள் திருப்பித் தரவேண்டும்; அதற்காக நாங்கள் இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நடத்திக்கொள்ளுகிறோம்’ என்று கூறுகிருர்கள். இன்னும் சில இடங்களில், அப்படியே வற்புறுத்தி நாங்கள் எடுத்தாலும், அதை நடத்துவதற்கு அரசு வாடகைக்குக் கட்டடம் எடுக்க வேண்டும். மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக கட்டடங்களை வாடகைக்குத் தரவேண்டும் என்று கேட்டால், வீட்டுச் சொந்தக்காரர்கள் பலர், பையன்கள் வசித்தால் வீட்டை இடித்துப் போட்டுவிடுவார்கள் என்று காரணம் சொல்லி வீடு தர மறுக்கிருர்கள். இடம் கிடைப்பதில்லை. சில திடல்கள் கிடைத்தால் அங்காவது குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று அப்படியும் சில இடங்களில்கூட பார்த்து செய்துகொண்டு வருகிறோம். இப்படிப் பல சிக்கல்கள் இருப்பதால் இந்தத் திட்டத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் நிறைவேற்றிக்கொண்டு வர முடிகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசு மானியம் பெற்று தனியார் நடத்துகிற அரிசன ஹாஸ்டல்களை மேற்பார்வை (சூபர்வைஸ்) செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நலத் துறை அதிகாரி அவர்கள் அடிக்கடி போய் மேற்பார்வை செய்கிறார். இயக்குநர் அவர்களும் மேற்பார்வை செய்கிறார். சில சமயங்களில் நான் கூட அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது திடீர் விஜயம் செய்து, பிள்ளைகளுக்கு சரியான உணவு தரப்படுகிறதா என்று பார்த்து வருகிறேன். எனவே, அடிக்கடி சென்று பார்த்து மேற்பார்வை செய்யப்படுகிறது. கணக்குகள் ஒழுங்காக வைத்துக்கொள்கிறார்களா, அன்றாடம் அவர்கள் உரிய அளவு உணவுப் பொருள் மாணவர்களுக்கு வழங்குகிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறது. மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து கணக்கு வைத்துக்கொள்வதில் சில தவறுகளைச் செய்கிறார்கள். பத்து மாணவர்களை வைத்துக்கொண்டு இருபது மாணவர்கள் இருப்பதாகக் கணக்குக் காட்டி, பணம் வாங்குகிறார்கள். அவைகளையெல்லாம் திடீர் என்று விஜயம் செய்து, தவறுகள் இருந்தால் கண்டுபிடித்து, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். இவைகளையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு, அரசே இந்த விடுதிகளை எடுத்துக் கொள்வது என்று நீண்ட காலத்திற்கு முன்பே முடிவு எடுத்து, அதன்படி இது கொஞ்சம் கொஞ்சமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தனியார் நடத்தும் விடுதிகளில் நிறைய ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் என்னென்ன ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஒழுங்கீனம்தான். முப்பது பிள்ளைகள் என்று சொல்லி அரசாங்கத்தினிடம் கிராண்ட் வாங்குவார்கள். அங்கு 20 பிள்ளைகள்தான் இருப்பார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாட்டிலுள்ள பல அரிசன மாணவர்கள் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லாமல் நெருக்கடியான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அரிசன வீட்டு வசதி கழகத்தின் மூலமாக முதல் கட்டமாக கடன் தொகையை பெற்று அது மாணவர்கள் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் உருவாக்குவதற்கு உரிய வழி வகைகள் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த எண்ணத்தில்தான் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெற்று வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக இந்த விடுதிகள் கட்டவேண்டும் என்பது தான் அரசின் திட்டம். ஆனால், இடையிலே அந்த வங்கிகள் கடன் கொடுக்கிறேன் என்று சொல்லி கடைசியில் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதனால்

1974 மார்ச் 25]

இந்தத் திட்டம் இப்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. வங்கிகள் இப்படிப்பட்ட திட்டங்களுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசு அவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அமைத்த அந்த மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூட அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டார்கள். நாமும் வங்கிகளைச் சேர்ந்தவர்களை நேரில் சிலரை அழைத்துப் பேசியும் கூட அவர்களெல்லாம் 4½ சதவீதம் வட்டிக்குக் கொடுக்க முடியாது, 10½ சத விகிதம் வட்டிக்குத்தான் கொடுக்கிறோம். அதோடுகூட வெறும் வீடுகள் மட்டும் கட்டிக் கொடுத்தால் தங்களுக்கு பணம் திருப்பி வருவதற்கு வாய்ப்பு இல்லை. அரசாங்கமே கடன் பெற்று திருப்பித் தருவதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. குறைந்த வட்டிக்கு வீடுகிகள் கட்டுவதற்குப் பணம் கடன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். எகனமிக் யூனிட் இல்லாமல் கடன் கொத்தால் எங்களுக்குப் பணம் திருப்பி வருவதற்கு எங்கே வாய்ப்பு இருக்கிறது, வீடுகள் கட்டிக் கொடுத்துவிட்டு சொந்தக்காரர்கள் கடன் தொகையை திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டால் எங்கள் பணம் என்ன ஆவது, ஆகவே தாங்கள் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நாமும் மத்திய சர்க்காருக்கு வங்கிகளிலிருந்து இப்படிப்பட்ட காரியங்களுக்காக கடன் வழங்கவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். மத்திய அரசு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு இப்படிப்பட்ட தாக்கிதோ, உத்தரவோ தருவார்களானால், வங்கிகள் கடன் தர முன்வரும். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டது போல வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியும்.

இராதாபுரம் பகுதியில் இரால் மீன் விற்பனை

***599. வினா—திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி கடற்கரை பகுதிகளில் இரால் மீன்பிடி காலங்களில், கேரள வியாபாரிகள் எல்லோரும் கூட்டு சேர்ந்து இராலை குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இராதாபுரம் தொகுதி கடற்கரைப் பகுதிகளில் கேரள முதலாளிகள் நேரடியாக இராலைக் கொள்முதல் செய்யவில்லை. கேரளாவில் இராலைப் பக்குவப்படுத்தி மேல்